<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>
<u>அ.வ.எண். 195/2007</u>

பெயர் : கருணாகரன்
சாட்சி – பி.வா.சா–4 நாள்: 10.10.2025

---

**<u>குறுக்கு விசாரணை (4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு)</u>**

1. எனக்கு தற்போது 63 வயது ஆகிறது. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்த போது நீதிமன்றத்தில் இருந்து முன்னிலையாவதற்காக எனக்கு அழைப்பானை சார்வு செய்யப்பட்டதா என்றால் எந்த அழைப்பாணையும் வரவில்லை. இந்த வழக்கு நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 2 மாதங்களுக்கு முன்பாக தான் தெரியவந்தது. 2 மாதங்களுக்கு முன்பு வழக்கு பற்றி என்னிடம் யார் சொன்னார்கள் என்றால் ஊருக்குள் டிரைவராக இருக்கும் ஒரு நபர் சொன்னார். அவரது பெயர் என்ன என்றால் எனக்கு தெரியாது.

2. மேற்படி விவரம் சொன்ன நபர் வழக்கு எண் உள்ளிட்ட விவரங்களை சொன்னாரா என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், வழக்கின் எண் என்ன என்றும் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் வாதிகள் என்னிடம் சொன்னார்கள். நான் இந்த வழக்கில் வழக்கு சம்பந்தமாக வழக்கறிஞர் திரு.பொன்னுசாமி அவர்களை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நான் வழக்கறிஞர் திரு.கோபாலகிருஷ்ணன் அவர்களை பார்க்க சென்றேன் அவர் இல்லை. அதன் காரணமாக இதுவரை வழக்கறிஞரை நான் பார்க்கவில்லை.

3. எனது நிரூபன வாக்குமூலத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்களை யார் தட்டச்சு செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நிரூபன வாக்குமூலத்தில் என்ன விவரம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது வாதிகள் சொல்லி தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 28.02.2007 தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வா.சா.ஆ.5 28.02.2007 தேதியிட்ட விடுதலை

பத்திரத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். வா.சா.ஆ.3 28.02.2007 தேதியிட்ட விடுதலை பத்திரத்தை தயார் செய்தவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். விடுதலை பத்திரம் என்று என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை. கிரையம் என்று சொல்லி தான் வாங்கினார்கள்.

4. 28.02.2007 தேதியில் நான் மொத்தம் எத்தனை பத்திரங்களில் கையெழுத்து போட்டேன் என்றால் 2 பத்திரங்களில் கையெழுத்து போட்டேன். ஒரு பத்திரமானது சங்கர் என்பவருக்கு விற்பனை செய்யப்பட்ட கிரைய பத்திரம் என்றால் சரிதான். நான் சார்பதிவாளர் அலுவலகம் சென்று கையெழுத்து போட்டேனா என்றால் நான் அலுவலகம் செல்லவில்லை, நான் காரில் அமர்ந்திருந்தேன் வெளியே வந்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

5. சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பதிவேட்டில் நான் கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். கைரேகை வைத்தேனா என்றால் வைத்தேன். எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் ஒரு கையெழுத்து போட்டேன். எத்தனை கைரேகை வைத்தேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை. என்னிடம் வாங்கிய அத்தனை கையெழுத்துக்களும் காருக்குள் அமர்ந்திருந்த போதுதான் போட்டேன். 28.02.2007 தேதியில் நான் உடல்நிலை நல்ல நிலையில் தான் இருந்தேன். நடக்க கூடிய நிலையில் தான் இருந்தேன். இருந்தும் என்னிடம் காரில் வந்து தான் கையெழுத்து வாங்கினார்கள்.

6. கையெழுத்து போடும்போது நான் ஏன் 2 பத்திரங்களில் கையெழுத்து வாங்குகிறீர்கள் என்று கேட்கவில்லையா என்றால் என்னிடம் 2 பத்திரங்கள் எல்லாம் காண்பிக்கவில்லை. ஒட்டுமொத்தமாக சேர்த்து வைத்து சங்கர் தான் என்னிடம் காருக்குள் வைத்து வாங்கினார். சங்கர் 2 பத்திரங்களை சேர்த்து வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார் என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2 மாதங்களுக்கு முன்பு தான் தெரியவந்தது.

7. 2 மாதங்களுக்கு முன்பு 2 பத்திரங்களை சேர்த்து வைத்து கையெழுத்து வாங்கியுள்ளார்கள் என்ற விவரத்தை என்னிடம் யார் சொன்னார் என்றால் 3ம் வாதியின் மகன் சொன்னார். எந்த பத்திரங்களை என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று நான் அந்த பத்திரங்களை வாங்கி பார்த்தேனா என்றால்

இல்லை. என்னிடம் காட்டப்பட்ட வா.சா.ஆ–3 மற்றும் வா.சா.ஆ–5 ஆவணங்களை இன்று தான் நான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன். அடுத்த படம்

8. வா.சா.ஆ–3 மற்றும் வா.சா.ஆ–5 ஆவணங்களை இன்று தான் நான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்ற போது, எனது எதிர் வழக்குரை மற்றும் நிரூபன வாக்குமூலத்தில் விடுதலை பத்திரத்தில் ஏமாற்றி கையெழுத்து வாங்கியுள்ளார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 28.02.2007 தேதியில் எங்கு வசித்து வந்தேன் என்றால் மூலனூர் பெரியயண்ண கவுண்டர் வலசு கிராமத்தில் வசித்தேன். 2 பத்திரங்களில் கையெழுத்து வாங்கியுள்ளார் என்று தெரிந்த பின்னர் நான் சங்கரை சந்தித்து கேட்டேனா என்றால் இல்லை. சங்கருக்கு எதிராக அவர் ஏமாற்றி கையெழுத்து வாங்கியதற்காக காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

9. மேற்படி என்னை ஏமாற்றி எழுதி வாங்கியதாக சொல்லும் விடுதலை பத்திரத்தை செல்லாது என்று கோருவதற்கு வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் வாதிகளுக்கும் இன்றுவரை நல்ல உறவுமுறைதான் இருந்து வருகிறது என்றால் சரிதான். இந்த வழக்கை வாதிகள் மூவரும் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எதற்காக இந்த வழக்கை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் விடுதலை பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை என்றும், சொத்து வேண்டும் என்றும் போட்டுள்ளார்கள்.

10. வாதிகள் தங்களது வழக்குரையில் நானும், சுப்ரமணியமும் சேர்ந்து விடுதலைப் பத்திரத்தை மோசடியாக எழுதி வாங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். 1 மட்டும் 2 வாதிகள் கையெழுத்து போட மாட்டார்கள் அவர்கள் ரேகைதான் வைப்பார்கள். 3 ம் வாதி கையெழுத்து போடுவாரா என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 அசல் விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் தான் வா.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான்.

11. சங்கருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ள பத்திரத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்க்கவில்லை கையெழுத்து மட்டும்தான் போட்டேன். சங்கருக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய தொகையில் எனக்கு எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் ரூபாய் 75 ஆயிரம் கொடுத்தார்கள். சுப்ரமணியம் எனக்கு

எவ்வளவு கொடுத்தார் என்றால் அவர் எதுவும் கொடுக்கவில்லை. சங்கருக்கு விற்றது போக மீதமுள்ள தாவா சொத்தினை சுப்பிரமணியமும் அவரது மகன்களும் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல எல்லோரும் தான் அனுபவித்து வருகிறோம்.

12. சுப்ரமணியம் மற்றும் அவரது மகன்கள் தான் சொத்திற்கான வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் சொத்தினை அனுபவித்து வருவதாகவும், வரி செலுத்தி வருவதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சங்கருக்கு சொத்தினை விற்றது போக மீதம் இருந்த தாவா சொத்தினை நாங்களே விருப்பப்பட்டு சுப்பிரமணியத்திடம் இருந்து தலா ரூபாய் 10 ஆயிரம் பெற்றுக் கொண்டு, விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு தற்போது எழுதிக் கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. விடுதலை பத்திரத்தை நானே தயார் செய்துவிட்டு தற்போது தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13. காருக்குள் இருந்து தான் கையெழுத்து போட்டேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சங்கர் என்னிடம் 2 பத்திரங்களை சேர்த்து வைத்து கையெழுத்து வாங்கியுள்ளார் என்று சொல்வது நான் வழக்குக்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல. வாதிகளும், நானும் விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. தற்போது அபலாபம் அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கில் வாதிகளுடன் சேர்ந்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

14. நான்தான் விடுதலை பத்திரத்தை தயார் செய்ததால் எனக்கு விடுதலை பத்திரத்தை பற்றி நன்கு தெரியும் என்பதால் தான் நான் வழக்கை நடத்தாமல், தோன்றா தரப்பினராக இருந்துவிட்டு தற்போது வாதிகள் கட்டாயப்படுத்தியதன் அடிப்படையில் ஒருதலை பெற்ற உத்தரவை ரத்து செய்து வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எழுதப் படிக்கவே தெரியாது. எனது சாட்சியம் பொய்யானது என்றும், ஏற்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. (சாட்சியிடம் அவரது நிரூபன வாக்குமூலத்தை கொடுத்து படிக்க சொன்னபோது அவர் எவ்வித தடங்கலும் இன்றி

படித்துக்காண்பித்தார். அவரது ஊர் பெயரும், வயதும் தவறுதலாக உள்ளது என்று பிழையையும் சுட்டிக்காட்டினார்.)

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.10.10 18:13:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.